# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THIRUVIDAIMARUTHUR.

Deposition of Witness for : PW-1 | Date : 25.03.2025

Case No. : O.S. 166/2019 | Nationality : Indian

Name : ஜெயராமன் | Religion :

Father's/Husband's Name : சாமிநாதன் | Age : 70

Village :

Taluk :

<u>வா.சா.1</u>

சாட்சி சத்திய பிராமாணம் செய்து விசாரிக்கபடுகிறார்.

<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

தாவா சொத்துக்களில் நான் தான் இருந்து வருகிறேன் என்றாலும், பிரதிவாதி இல்லை என்றாலும் சரிதான். புல எண்.130/16-ல் கண்ட 2 1/2 ஏர்ஸ் விஸ்தீரணமுள்ள சொத்து முழுதும் என்னிடம் தான் உள்ளதா என்றால் உள்ளது. பிரதிவாதியின் மாட்டு கொட்டகை, குப்பைக்குழி, புளியமரம், கழிவறைகள் ஆகியவை எங்கு உள்ளது என்றால், என்னுடைய சொத்தில் தான் உள்ளது. மேற்படி அமைப்புகள் எனது சொத்தில் 1.25 ஏர்ஸில் அமைந்துள்ளதா என்றால் சரியல்ல. மேற்படி அமைப்புகள் பிரதிவாதியின் வீட்டிற்கு பின்பக்கம் அமைந்துள்ளது என்றால், என்னுடைய பாகத்தில் தான் உள்ளது. மேற்படி அமைப்புகள் எந்த சர்வே எண்ணில் அமைந்துள்ளது என்றால் புல எண்.130/16 ல் அமைந்துள்ளது. புளிய மரம் யாருடைய மரம் என்றால், என்னுடைய மரம் தான். எந்த வருடம் வைத்தேன் என்றால், எனக்கு அதெல்லாம் சொல்ல தெரியாது. மாட்டுகொட்டகை எத்தனை வருடமாக உள்ளது என்றால், சுமார் 15 வருடங்கள் உள்ளது. பிரதிவாதி தகப்பனார் சுமிநாதன் என்பவரை தெரியுமா என்றால் தெரியும். மாட்டுகொட்டகை அவர் இருக்கும் போது கட்டப்பட்டதா என்றால், அவர் காலத்திற்கு பிறகு தான் கட்டப்பட்டது. சாமிநாதன்

எப்போது இறந்தார் என்று தெரியுமா என்றால் தெரியாது. அவர் இறந்த பிறகு எத்தனை ஆண்டுகள் கழித்து மாட்டு கொட்டகை கட்டப்பட்டது என்று தெரியுமா என்றால், தெரியவில்லை. 18/08/2016 ம் தேதி பிரதிவாதிகள் எனது சொத்தினை ஆக்கிரமிக்க வந்தபோது நான் தடுத்து நிறுத்தியதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் தடுத்து நிறுத்தியவுடன் பிரதிவாதிகள் அந்த இடத்தை விட்டு சென்றுவிட்டார்கள் என்றால் சரிதான். அதுசம்மந்தமாக காவல் நிலையத்தில் புகார் எதுவும் அளித்தேனா என்றால் இல்லை. எனது சொத்தில் பிரதிவாதிகள் அத்துமீறி நுழைய வருவதாக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி 2016 ம் ஆண்டு இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளேனா என்றால் சரிதான். 15 வருடத்திற்கு முன்பாக மாட்டுகொட்டகை கட்டப்படும்போது நான் ஏன் ஆட்சேபனை எதுவும் செய்தேனா என்றால் என்னுடைய இடத்தில் மாட்டு கொட்டகை இல்லை. குப்பைகுழி என்னுடைய இடத்தில் தான் உள்ளது. எத்தனை கழிவறைகள் உள்ளது என்றால், இரண்டு கழிவறைகள் உள்ளது. அது என்னுடைய கழிவறைகள் தான். அந்த கழிப்பறைகளை பிரதிவாதிகள் பயன்படுத்தி வருகிறார்களா என்றால் இல்லை. அந்த கழிப்பறைகள் மத்திய அரசின் தொகுப்பு திட்டத்தின் கீழ் கட்டப்பட்டதா அல்லது நானே கட்டினேனா என்றால் நான் தான் கட்டினேன். அந்த கழிப்பறைகள் பிரதிவாதிகள் குடும்ப உறுப்பினர்களின் பெயரில் அரசாங்கத்ததால் நிதி ஒதுக்கப்பட்டு கட்டப்பட்டுள்ளது என்றால், அதுபற்றி எனக்கு தெரியவில்லை. இந்த வழக்கில் மறைத்து தாக்கல் செய்யப்பட்ட வாரிசுகளை தரப்பினராக சேர்க்க ஆட்சேபனை உள்ளதா என்றால், நான் வாரிசுகளை மறைத்து தாக்கல் செய்யவில்லை. இவ்வழக்கில் 2, 3 இன சொத்துக்களை பொறுத்து பிரதிவாதிகளுக்கு பிரச்சனை இல்லை என்றால் 1 வது இன சொத்தை பொறுத்து எனது மற்றும் பிரதிவாதிகளின் தகப்பனார் என்பதை பயன்படுத்தி நில உடமை மேம்பாட்டு திட்டத்தின் கீழ்

தவறுதலாக பட்டா வழங்கப்பட்டது என்றால் சரியல்ல. 1வது இன சொத்தில் 1.25 ஏர்ஸ் விஸ்தீரணத்தை பொறுத்து பிரதிவாதிகள் விளம்புகை பரிகாரம் கோரி கும்பகோணம் சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.200/2024 என வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். அந்த வழக்கில் தான் ஆஜராகி நடத்தி வருகிறேன் என்றால் சரிதான். அந்த வழக்கில் கமலாதேவி ஆஜராகாமல் ஒருதலைபட்சமாக ஆகப்பட்டுள்ளார் என்றால் கமலாதேவிக்கு சேர்த்து நான் தான் ஆஜராகி உள்ளேன். தாவா சொத்துக்களில் ஏற்பட்ட பிரச்சனை சம்மந்தமாக இருதரப்பினருக்கும் எதிராக இந்நீதிமன்றத்தில் குற்றவியல் வழக்குகள் நிலுவையில் இருந்து வருகிறது என்றால் சரிதான். நான் கோரியுள்ள பரிகாரத்திற்கும், நான் அளித்துள்ள சாட்சியத்திற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. நான் வசிக்கும் தெருவில் நத்தத்திற்கு பின்னால் புஞ்சை அணைத்தும் நத்தம் சொத்தில் வசித்து வரும் நபர்களுக்கு நில உடமை பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வருவாய் துறையில் பெயர் குழப்பத்தில் கொடுக்கப்பட்ட பட்டா அடிப்படையில் நான் இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 1வது இன சொத்தை பொறுத்து எந்த மூல ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்து பிரதிவாதிகளின் தந்தை காலத்தில் இருந்தே அவர்களது நீண்ட அனுபவத்தில் இருந்துவருகிறது என்றாலும் சரியல்ல. அதனால் அவர் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்க தக்கதில்லை என்றால் சரியல்ல.

x

Taken down by Typed to my dictation
in Open Court read over to the witness
admitted and acknowledged by
him/her to be correct.

SIVAPALANI

Digitally signed by SIVAPALANI
Date: 2025.04.10 10:49:14 +0530

District Munsif cum Judicial Magistrate,
Thiruvidaimarudur.